துறைத் தலைவரின், 1982-83 மற்றும் 1983-84 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் வணிகம், சமூகநலத்துறை தொடர்பான பத்திகள் குறித்த பொது நிறுவனங்கள் குழு (1989-90) அளித்த 31-வது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய குழுவின் 41-வது அறிக்கை, மற்றும் இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1982-83-ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் (சிவில்) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை தொடர்பான பத்திகள் குறித்த பொது நிறுவனங்கள் குழு (1986-87) அளித்த 47-வது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய குழுவின் 42-வது அறிக்கை, மற்றும், 1976-77 முதல் 1979-80 ஆண்டு வரையிலான தமிழ்நாடு கதர் கிராமத் தொழில்கள் வாரியத்தின் கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கைகளின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் (1989-90) 50-வது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரை மீது அரசு மேற்கொண்டு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய குழுவின் 43-வது அறிக்கைகளை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

5, அரசினர் தீர்மானங்கள்,

(அ) 'முரசொலி' நாளிதழ் மீதான உரிமைக் குழுவின் அறிக்கை,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தீர்மானங்கள். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.—

"9—4—1992-ஆம் நாளன்று பேரவைக்கு அளிக்கப் பெற்ற 'முரசொலி' நாளிதழ் மீதான அவை உரிமைக் குழுவின் அறிக்கை. பேரவை விதி 229 (ஆ)-ன் கீழ் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

எனக் கோருகிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது,

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" முரசொலி நாளிதழ் மீதான அவை உரிமைக் குழுவின் அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளை சட்ட மன்றப் பேரவை விதி 229 (ஈ)-ன்படி, இப்பேரவை இசைந்து ஏற்றுக்கொள்ள வேண்டும் "

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ' ஆம் ' என்க. (ஆம்)
மறுப்போர் ' இல்லை ' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

முற்பகல் 10-45

முரசொலி நாளிதழ் ஆசிரியரை இப்பேரவை நேரடியாகக் கொண்டு வந்து கண்டிக்க வேண்டுமென பேரவை முடிவு செய்துள்ளதால் உடனடியாக அவ்வாசிரியரை இப்பேரவைமுன் வரவழைத்து கூண்டில் ஏற்றித் தண்டனையை நிறைவேற்ற உரிய சம்மன் அனுப்பப்படும். அப்பத்திரிகை நிருபர்களுக்கு பேரவையின் நடவடிக்கைகளைக் குறிப்பு எடுப்பதற்காக வழங்கப்பட்டுள்ள அனுமதியினை இன்றுமுதல் ரத்து செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

(ஆ) ' கோவை மாலை முரசு ' நாளிதழ் மீதான உரிமைக் குழுவின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,